குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

# அடிமையாக இருந்த யோசேப்பை தேவன் கனம் பண்ணினார்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: M. Maillot; Lazarus; Alastair P.

தழுவியவர்: M. Maillot; Sarah S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children

www.M1914.org

©2023 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

தன்னுடைய முந்தைய எஜமான் போத்திபாராலே, யோசேப்பு சிறைச்சாலையில் தவறாக அடைக்கப்பட்டான். சிறைச்சாலையில் யோசேப்பு கீழ்ப்படிகிறவனாகவும், உதவி செய்கிறவனாகவும் காணப்பட்டான்.



சிறைக் காப்பாளன் அங்குள்ள வாழ்க்கையை ஒழுங்கு செய்ய யோசேப்பை நம்பினான். தேவன் யோசேப்போடே இருந்தபடியினாலே, அங்குள்ள எல்லோருக்கும் சிறைச்சாலை ஒரு நல்ல இடமாக மாறியது.



ராஜாவின் பானபாத்திரகாரனும், சுயம்பாகியும் அந்த சிறைச்சாலையில் காணப்பட்டார்கள். "நீங்கள் ஏன் துக்கமாயிருக்கிறீர்கள்?"



என்று யோசேப்பு ஒரு நாள் கேட்டான். "எங்களுடைய சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்ல யாருமில்லை," என்று



கஷ்டத்தோடு அந்த மனிதர்கள் சொன்னார்கள்.

"தேவனாலே சொல்ல முடியும்!" என்று யோசேப்பு கூறி, "சொப்பனங்களை கூறுங்கள்," என்றான்.



யோசேப்பு பானபாத்திரகாரனை நோக்கி, "உன்னுடைய சொப்பனத்தின் அர்த்தம் என்னவென்றால் இன்னும் மூன்று நாட்களில் நீ பார்வோனின் தயவை பெற்று நீ அவனுடன் இருப்பாய்," என்றான்.



"என்னை நினைவு கூர்ந்து என்னை விடுவிக்கும்படி பார்வோனிடம் கேள்." சுயம்பாகியினுடைய சொப்பனம் கவலை தரும் அர்த்தமாயிருந்து. "மூன்று நாட்களுக்குள் நீ சாவாய்," யோசேப்பு சொன்னான். அந்த இரண்டு சொப்பனங்களும் அப்படியே நடந்தன.



ஒரு நாள் பார்வோன் மனக்கலக்கமடைந்தவனாய் எழுந்தான். அதுவரை பானபாத்திரக்காரன் யோசேப்பை மறந்து போனான்.



"நான் ஒரு சொப்பனம் கண்டேன்." என்று பார்வோன் அழுதான்.

அவனுடைய சாஸ்திரிகளால் அதற்கு அர்த்தம் சொல்ல முடியவில்லை. அப்பொழுதுதான் பானபாத்திரகாரனுக்கு சிறையிலுள்ள



யோசேப்பின் ஞாபகம் வந்தது. அவன் பார்வோனிடத்தில் யோசேப்பை பற்றி சொன்னான்.

யோசேப்பை உடனே அழைத்துவர பார்வோன் ஆள் அனுப்பினான். "உம்முடைய சொப்பனம் தேவன் கொடுக்கிற செய்தி," என்று யோசேப்பு ராஜாவினிடத்தில் சொன்னான்.



"எகிப்திலே ஏழு வருஷம் பரிபூரண விளைச்சலும், பின்பு ஏழு வருஷம் கடுமையான பஞ்சம் உண்டாகும்."



"இந்த நல்ல ஏழு வருடங்களில் உணவை பாதுகாப்பாக பத்திரப்படுத்தி வைக்க திட்டம் பண்ணுங்கள். இல்லையெனில் உம்முடைய ஜனங்கள் பஞ்சத்தினாலே



செத்துப்போவார்கள்," ...

... என்று யோசேப்பு
பார்வோனுக்கு
அறிவுரை சொன்னான்.
"தேவன் உன்னோடு
இருக்கிறார்,"
என்று
பார்வோன்
அறிவித்தான்.
"நீ எகிப்தை
ஆளுகை
செய், எனக்கு
அடுத்தபடியாக
நீ இருப்பாய்."



ஏழு வருட பரிபூரண விளைச்சல் வந்தது. பின்பு ஏழு வருட பஞ்சம் வந்தது.  உணவு தானியத்திற்கு எல்லா இடங்களிலும் குறைவு ஏற்பட்டது.



ஆனால், எகிப்திலே உணவு தானியங்களை தேவைக்கும் அதிகமாக சேமித்து வைத்ததினாலே அப்படியொரு நிலைமை ஏற்படவில்லை. தூர தேசமான யோசேப்பின் சொந்த நாட்டில், யாக்கோபின் குடும்பம் பஞ்சத்தால் வாடியது.



எல்லா தேசங்களிலிருந்தும் ஜனங்கள் தானியம் கொள்ள எகிப்திற்கு போனார்கள். "நீங்களும் கண்டிப்பாக போங்கள், அல்லது நாம் பட்டினியால் சாவோம்" என்று யாக்கோபு தன்னுடைய குமாரர்களுக்கு கட்டளையிட்டான்.



எகிப்திற்கு போய் தானியம் வாங்க,
அவனுடைய குமாரர்கள் தயாரானார்கள்.



யாக்கோபுடைய குமாரர்கள், எகிப்திற்கு அதிபதியாய் இருந்தவர் முன் பணிந்து நின்றார்கள். அவர்களுடைய சகோதரனாகிய யோசேப்பை அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. ஆனால் யோசேப்பு கண்டு கொண்டான்.



தன்னுடைய பாலிய பருவ சொப்பனங்களை நினைவு கூர்ந்தான். அவனுடைய சகோதரர்களுக்கு மேலாக தேவன் அவனை உயர்த்தியிருந்தார்.



யோசேப்பு ஞானமாய் செயல்பட்டான். கடுமையாக பேசி அவர்களுடைய சகோதரனாகிய சிமியோனை பிணைக்கைதியாக ...



... எடுத்துக்கொண்டான்.
"தானியங்களை
எடுத்துக்கொள்ளுங்கள்
உங்கள் வீடுகளுக்கு
திரும்பப்போய்,
உங்களுடைய
இளைய ...



... சகோதரனோடு திரும்பி வாருங்கள். அப்பொழுது நீங்கள் வேவுகாரர்கள் அல்ல என்று அறிவேன்," என்று யோசேப்பு ...



... கட்டளையிட்டான். அநேக
வருடங்களுக்கு முன்னால்
யோசேப்பை விற்றுப்போட்டதற்க்காக
தேவன் நம்மை
தண்டிக்கிறார் என்று



நினைத்தார்கள்.

யாக்கோபும் அவனுடைய குமாரரும் குழப்பமடைந்தார்கள். "தானியத்திற்கு செலுத்திய பணம் திரும்ப தானியத்தோடு வைக்கப்பட்டிருந்தது. பென்யமீனை அழைத்து வாருங்கள் என்று அதிபதி சொன்னான்."



யாக்கோபு பென்யமீனை அவர்களுடன் அனுப்ப இஷ்டப்படவில்லை. ஆனால் தானியமோ முடிந்து விட்டது. சகோதரர்கள் திரும்பவும் எகிப்துக்கு போக வேண்டும். பென்யமீன் அவர்களுடன் சென்றான்.



பென்யமீனை பார்த்தபோது, பெரிய விருந்து பண்ண தன்னுடைய வேலைக்காரர்களுக்கு யோசேப்பு கட்டளையிட்டான். சகோதரர்கள் விருந்துக்கு அழைக்கப்பட்டார்கள்.



"உங்களுடைய தகப்பன் உயிருடன் நல்ல சுகமாயிருக்கிறாரா," என்று யோசேப்பு கேட்டான். முழுக்குடும்பத்தையும் எப்படி கொண்டு வரலாம் என்று யோசேப்பு ஒருவேளை யோசித்திருக்கலாம்.



பல வருடங்களுக்கு
முன்னால் அவர்கள் செய்த
பாவத்திற்கு உண்மையிலே
மனஸ்தாபப்பட்டிருக்கிறார்களா?
என்று யோசேப்பு
அறிய விரும்பினான்.
பந்தி விசாரணை
முடிந்தபின் அவர்கள்



திருடினார்கள்
என்று குற்றம்
சாட்டினான்.

"உங்களை தண்டிப்பதற்கு, பென்யமீனை எனக்கு அடிமையாக வைத்துக் கொள்கிறேன்," என்றான் யோசேப்பு. ஆ என் ஆண்டவனே, அவனுக்கு பதிலாக என்னுடைய வாழ்க்கையை எடுத்துக்கொள்ளும்," என்று யூதா கதறினான்.



தன்னை விற்கும்
படியாக ஆலோசனை
சொன்ன யூதா,
முற்றிலும்
மாறிவிட்டான்
என்று
யோசேப்பு
கண்டான்.





தன்னுடைய குடும்பத்தின் மேலுள்ள அன்பை அடைத்து வைக்க முடியாதவனாய், யோசேப்பு எகிப்தியரை வெளியே போகச் சொன்னான். பின்பு அவன் அழத்தொடங்கினான்.



"உங்களுடைய சகோதரனாகிய யோசேப்பு நான், என்னை எகிப்திற்கு விற்றுப்போட்டிர்களே."

திகிலும், பயமும் நிறைந்தவர்களாய், சகோதரர்கள் ஒன்றும் பேசவில்லை.

யோசேப்பு தன்னுடைய சகோதரர்களை உற்சாகப்படுத்தினான்.

"உங்களை பஞ்சத்திலிருந்து காப்பாற்றும்படி, தேவன் என்னை எகிப்திற்க்கு அதிபதியாக மாற்றினார்.




போங்கள், என்னுடைய தந்தையை அழைத்து வாருங்கள்.
நான் உங்களை பராமரிப்பேன்."

யாக்கோபும் யோசேப்பும் மறுபடியும் இணைக்கப்பட்டார்கள்.



அவர்களுடைய முழுக்குடும்பமும் அங்கே சமாதானத்துடனும், பரிபூரணத்துடனும் வாழ்ந்தார்கள்.

அடிமையாக இருந்த யோசேப்பை
தேவன் கனம் பண்ணினார்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

ஆதியாகமம் 39 - 45

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

# முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16